மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-03

வினாத்தாள் - I


சுட்டெண்:- .....


நேரம் :- 1 மணித்தியாலம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.

- **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **முன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- **செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

* **இலக்கம் (01), (02) ஆகிய வினாக்களில் முதல் உருவுடன் மிகவும் நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.**


(01) 

(1) 

(2) 


(3) 

(02) 

(1) 

(2) 

(3) 

(03) 

இச்சதுரமுகியின் எல்லா எதிர்ப்பக்க முகச் சோடிகளினதும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 9 ஆகும். அதன்படி, புலப்படாத முகங்களினது இலக்கங்களின் கூட்டுத்தொகை,

(1) 15 (2) 17 (3) 19

(04) பெட்டியொன்றினுள் ஒவ்வொரு நிறத்திலும் உள்ள பந்துகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.




அம்புக்குறிகளினால் காட்டப்படும் கருத்து

குறைவு → அதிகம் **அதிகம் ← குறைவு**

அதன்படி, அப்பெட்டியில் அதிகமாக இருப்பது,


(1) சிவப்பு நிறப் பந்துகள் (2) நீல நிறப் பந்துகள் (3) மஞ்சள் நிறப் பந்துகள்

(05) கீழே தரப்பட்டுள்ள வடிவங்களை நன்கு பரிசீலிக்குக.



ஒவ்வொரு வடிவத்திற்கும் வரையக்கூடிய சமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை கூடிச்செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடை,

(1) A, D, C, B (2) C, A, D, B (3) D, A, C, B


(06) 

இவ்வுருவில் காணக்கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கை,

(1) 3 (2) 4 (3) 5

(07) பின்வரும் மூன்று சொற்சோடிகளில் இரண்டு சொற்சோடிகளின் தொடர்பு சமனானதாகும். அதன்படி, வித்தியாசமான தொடர்புடைய சொற்சோடியைத் தெரிவு செய்க.

(1) இலாபம் - நஷ்டம் (2) இறுதி - முடிவு (3) நண்பன் - தோழன்

(08) 

சுனில் P யிலிருந்து Q வரை பயணம் செய்த பாதையை இவ்வுரு காட்டுகின்றது. சுனில் P யிலிருந்து Q வரை பயணிக்கும்போது அவன் தனது வலது கைப்பக்கத்திற்குத் திரும்பிய தடவைகளின் எண்ணிக்கை,

(1) 3 (2) 2 (3) 1

(09) மனிதன் புகையிரதத்திலிருந்து இறங்கி ஊருக்குச் சென்றான். பிள்ளை பேருந்திலிருந்து இறங்கி பாடசாலைக்குச் சென்றது.

புகையிரதத்திற்குப் பேருந்து எனின், ஊருக்கு .....

(1) மனிதன் (2) பிள்ளை (3) பாடசாலை


www.ikeau.lk

(10) பாத்திமா காலை 8.30 மணியிலிருந்து காலை 11.00 மணிவரை விளையாடினாள். சியானா காலை 7.00 மணியிலிருந்து காலை 9.00 மணிவரை விளையாடினாள். அதன்படி, அவர்கள் இருவரும் ஒன்றாக விளையாடிய நேரம்,

(1) 30 நிமிடங்கள் (2) 1 மணித்தியாலம் (3) 45 நிமிடங்கள்

(11) சரியான அளவுத்திட்டத்தில் வரையப்பட்டுள்ள உருச்சோடியைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(12) மகேஷ் புகைப்படம் ஒன்றைப் பார்த்து இப்படிக் கூறினார்.
"இப்புகைப்படத்தில் இருக்கும் நபரின் அப்பா எனது மகனாவார்." அதன்படி, மகேஷ் புகைப்படத்தில் இருக்கும் நபரின்,


(1) பாட்டன் (2) சகோதரன் (3) சித்தப்பா

(13) பின்வரும் உருக்களில் இரண்டு உருக்கள் சகல விதத்திலும் சமனானவை. அதன்படி, வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(14) 


இத்தராசு சமநிலையானது. அதன்படி, சரியான விடையைத் தெரிவு செய்க.


(1) △ = 2kg , ○ = 1kg


(2) △ = 4kg , ○ = 2kg


(3) △ = 5kg , ○ = 4kg


(15) பின்வரும் 1, 2 ஆகிய உருக்களில் எண்கள் ஏதோவொரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, 3 ஆவது உருவின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.










(1) 


(2) 


(3) 

(16) மரங்கள், மாமரங்கள், பலா மரங்கள் என்பவற்றைக் காட்டுவதற்கு மிகப் பொருத்தமான உரு,

(1) 

(2) 

(3) 

(17) 

இச்செவ்வக வடிவக் காணியைச் சுற்றி ஒரேயளவான தூரத்தில் கம்பித்தூண்கள் நாட்டப்பட்டுள்ளன. இச்செவ்வக வடிவக் காணியை A திசையிலிருந்து பார்க்கும்போது 10 கம்பித்தூண்களும் B திசையிலிருந்து பார்க்கும்போது 7 கம்பித்தூண்களும் தென்பட்டன. அதன்படி, அக்காணியைச் சுற்றி நாட்டப்பட்டுள்ள கம்பித்தூண்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 30 (2) 34 (3) 32

(18) பின்வரும் வாக்கியங்களில் எழுத்துக்கள் குறைபாடுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) மீன்கள் நீரில் வாழும். (2) அம்மா மகளுக்கு உணவு கொடுத்தாள்.


(3) பசுக்கள நிரை நரையாகச் சென்றன.

(19) பாடசாலையில் அதிகமாக இருப்பது,

(1) கரும்பலகைகள் (2) கதிரைகள் (3) கட்டிடங்கள்

(20) இரும்புக் கம்பியொன்றை சமனான 2 துண்டுகளாக வெட்டுவதற்கு 5 நிமிடங்கள் செலவாகும். அதன்படி, அக்கம்பியை சமனான 6 துண்டுகளாக வெட்டுவதற்குச் செலவாகும் நேரம்,

(1) 15 நிமிடங்கள் (2) 20 நிமிடங்கள் (3) 25 நிமிடங்கள்

(21) 

வட்ட வடிவக் கடதாசியொன்று பல தடவைகள் மடிக்கப்பட்டு துளையொன்று இடப்பட்டு விரிக்கப்பட்டபோது இவ்வுருவில் காட்டியுள்ளவாறான அலங்காரம் கிடைக்கப்பெற்றது. அதன்படி, அவ்வட்ட வடிவக் கடதாசி மடிக்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை,

(1) 3 ஆகும். (2) 4 ஆகும். (3) 2 ஆகும்.

www.lkedu.lk

சுட்டெண்:-.....

(22) * H △ ண A → ஆ □ B W ◠ E

மேலேயுள்ள வரிசையில் காணப்படும் மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 6 (3) 7

(23) பின்வரும் உரையாடலை வாசிக்குக.


மகனே! மாமியின் கடைக்குச் சென்று 10 முட்டைகள் வாங்கி வர முடியுமா?
சரி அம்மா, நான் தம்பியுடன் கடைக்குச் செல்லவா?
தம்பி பாடம் படிக்கிறான். அண்ணாவுடன் செல் மகனே.
சரி அம்மா.

மேற்படி உரையாடலில் எத்தனை நபர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது?


(1) 6 (2) 5 (3) 4

(24) பின்வரும் உருக்களில் பிழையாக வரையப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க.

(1) 

(2) 


(3) 


(25) 


இத்திண்மம் ஒரேயளவான கனவுருக்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இத்திண்மத்திலுள்ள கனவுருக்களின் மொத்த எண்ணிக்கை,


(1) 12 (2) 14 (3) 10

(26) புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் முதலில் தந்துள்ள திண்மத்தை அமைக்கக்கூடிய கார்ட்போர்ட் அட்டையைத் தெரிவு செய்க.



(1) 

(2) 


(3) 

(27) என்னிடமிருந்த மாம்பழங்கள் ஒரு குவியலில் 4 வீதம் இருக்குமாறு குவியல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இறுதிக் குவியலை அமைக்கும்போது 3 மாம்பழங்கள் குறைவாக இருந்தன. அதன்படி, என்னிடமிருந்த மாம்பழங்களின் எண்ணிக்கையாக இருக்கக்கூடியது,


(1) 13 (2) 18 (3) 24


(28) மூன்று வருடங்களுக்கு முன் தம்பியின் வயதினதும் எனது வயதினதும் கூட்டுத்தொகை 16 ஆகும். அதன்படி, தற்போது தம்பியின் வயதினதும் எனது வயதினதும் கூட்டுத்தொகை,


(1) 19 (2) 24 (3) 22

(29) 

வட்ட வடிவக் கடதாசித் துண்டொன்று 3 துண்டுகளாகக் கிழிக்கப்பட்டது. அவற்றுள் இரண்டு துண்டுகள் அருகே காட்டப்பட்டுள்ளன. அதன்படி, அவ்வட்ட வடிவக் கடதாசியின் நடுத்துண்டைக் காட்டும் உரு,

(1) 

(2) 

(3) 

(30) தேநீர் தயாரிப்பதற்கான 4 படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. எனினும் அவை சரியான ஒழுங்கில் எழுதப்படவில்லை.

A - கேத்தலை அடுப்பில் வைத்துச் சூடாக்குதல்.
B - சிறிய கோப்பைகளில் தேநீரை இட்டு சீனி சேர்த்தல்.
C - கேத்தலினுள் நீர் இடுதல்.
D - பாத்திரமொன்றினுள் தேயிலை இட்டு அதில் சூடான நீரைச் சேர்த்தல்.


இவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்தினால்,

(1) C, A, D, B (2) A, C, B, D (3) B, D, C, A

(31) முதலில் தந்துள்ள மூன்று சொற்களுடனும் தொடர்புடைய மற்றுமொரு சொல்லைத் தெரிவு செய்க.

உருளை , சதுரமுகி , கோளம்

(1) முக்கோணம் (2) வட்டம் (3) கனவுரு

(32) 

இவ்வுருவில் ஒருபக்க நீளமாக 3cm ஐக் கொண்ட சதுரம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. அதன்படி, ஒருபக்க நீளமாக 9cm ஐக் கொண்ட சதுர வடிவமொன்றை அமைப்பதற்குத் தேவைப்படும் இத்தகைய சதுர வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 12 (2) 9 (3) 8

www.ikedu.lk

(33) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

நூலகம் என்பது தேன்கூடு

நூல் ஒவ்வொன்றும் தேன்துளிகள்

நூலகம் என்பது .....

நூறாயிரமாம் நன்மலர்கள்

இடைவெளிக்குப் பொருத்தமான பாடல் அடியினைத் தெரிவு செய்க.

(1) பூவிதழ் (2) பூவிழி (3) பூங்காடு


(34) வீட்டுத்தோட்டத்திலுள்ள வெற்று டின்கள், பழைய டயர்கள், வெற்றுப் பாத்திரங்களை உரிய முறையில் அப்புறப்படுத்த வேண்டும். அதற்கான பிரதான காரணம்,

(1) அவை உக்குவன அல்ல என்பதனால்.

(2) அவற்றில் நீர் தேங்குவதால் நுளம்புகள் முட்டையிட்டுப் பரவக்கூடும் என்பதனால்.

(3) வீட்டுத்தோட்டம் அசுத்தமடைந்தால் அதன் அழகு இல்லாமல் போய்விடும் என்பதனால்.

(35)




அருகே கூண்டினுள் உள்ள உருக்கள் ஒரு கோலத்திற்கு ஏற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுக்கூண்டிற்குப் பொருத்தமான உரு,

(1)  (2)  (3) 

(36) கடிகாரமொன்று 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கும். மற்றுமொரு கடிகாரம் 1 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை ஒலிக்கும். மு.ப 7.00 மணிக்கு முதலாவது தடவையாக இரு கடிகாரங்களும் ஒரே தடவையில் ஒலித்தன. அதன்படி, மீண்டும் இரு கடிகாரங்களும் ஒரே தடவையில் ஒலிப்பது,

(1) மு.ப 7.30 மணிக்கு (2) மு.ப 7.45 மணிக்கு (3) மு.ப 8.00 மணிக்கு

(37)



ஒரேயளவான சிறிய சதுரமுகிகள் 18 ஐ ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் இப்பெரிய கனவுரு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இங்கு 2 முகங்கள் மட்டும் வெளியே தென்படும் சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 8 (2) 6 (3) 10


(38) மூன்று பிள்ளைகளின் பிறந்த தினங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

*** ரவி :- 2011. 12. 24** *** குமார் :- 2011. 03. 18** *** தினேஷ் :- 2011. 07. 03**

அதன்படி, குறைந்த வயதிலிருந்து கூடிய வயது வரையான ஒழுங்கில் பிள்ளைகளின் பெயர்களை எழுதினால் கிடைப்பது,

(1) குமார் - தினேஷ் - ரவி (2) ரவி - தினேஷ் - குமார் (3) தினேஷ் - ரவி - குமார்


(39)






A, B ஆகிய உருக்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது இரு செவ்வக வடிவக் கார்ட்போர்ட் துண்டுகளாகும். அவ்விரு கார்ட்போர்ட் துண்டுகளையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கப்பட்டுள்ள முறையை உரு C காட்டுகிறது. அதன்படி, உரு C யில் புள்ளிக்கோடுகளினால் காட்டப்பட்டுள்ள செவ்வக வடிவத்தின் அகலம், நீளம் என்பன முறையே,

(1) அகலம் - 2cm , நீளம் - 4cm (2) அகலம் - 1cm , நீளம் - 3cm (3) அகலம் - 1cm , நீளம் - 2cm

(40)



இந்நான்முகியைப் புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டுவதன் மூலம் கிடைக்கும் முகத்தின் வடிவம்,

(1)  (2)  (3) 

www.ikedu.lk


www.learneasy.lk இல்
தரம்5 (2021)
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன
தரித மீட்டல் வினா - விடை
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 5 மணிமுதல் 6.15 மணிவரை
உங்கள் பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
76667 4945


www.learneasy.lk இல்
தரம் 3
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன
உங்கள் பதிவுகளுக்கு
இன்றே அழையுங்கள்
76667 4945


www.learneasy.lk இல்
தரம்4 (2021)
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன
திங்கள் முதல் வெள்ளி வரை
இரவு 7 மணி தொடக்கம் 8 மணிவரை
உங்கள் பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
76667 4945


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 11 வகுப்புக்கள்
வணிகக்கல்வி
By : S.ரகு
SUNDAY & MONDAY : 7PM - 8PM
இலவசம்
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
தமிழ்
By : S.சிவநிதி
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
விஞ்ஞானம்
ஆ.ரஜீவன்
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
விஞ்ஞானம்
ச.சங்கீதன்
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
வரலாறு
தரம் 6 ~ 8
By : V.மோகன்
தரம் 9 ~ O/L
By : M.மயூரன்
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
ENGLISH
P. Mathura
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021
தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-03

வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
  - *** இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.**
  - *** எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
  - *** விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
  - *** செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

பச்சைப் பட்டாடை விரித்தாற்போல் காட்சி தரும் வயல் வெளிகளும், புல்வெளிகளும் காலை நேரத் தென்றலுக்கு தலை அசைக்கின்றன. சில்லென வீசும் புதுத் தென்றல் புத்துணர்ச்சியூட்ட பசுக்கன்றுகளும் தாய்பசுவை முட்டி மோதி முந்திக்கொண்டு துள்ளிக் குதித்து புற்றரைகளை நோக்கி விரைந்து செல்கின்றன.

(1) இங்கு விவரிக்கப்படும் காட்சி எவ்வேளைக்குரியது? .....

(2) பசுவின் இளமைப் பெயரைக் குறிக்கும் சொல்லை எழுதுக. .....

(3) "புற்றரை" என்ற சொல்லைப் பிரித்து எழுதுக. .....

(4) வினை அடைமொழிச் சொல்லொன்றை எழுதுக. .....

(02) பின்வரும் தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

நான் திங்களும் செவ்வாயும் பாடசாலைக்குச் செல்லவில்லை.

(1) .....

(2) .....

(03) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

(1) கல் + குகை :- ..... (2) முள் + செடி :- .....

(04) பின்வரும் பேச்சு வழக்கிலுள்ள வாக்கியத்தை எழுத்து வழக்கில் எழுதுக.

எங்கன்ற வீட்டை அவையள் வந்தீனம். :- .....

(05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான அடுக்குமொழியை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) கொடியிலிருந்த திராட்சைப் பழங்களை ..... (சதை சதையாக / குலை குலையாக) பறித்தான்.

(2) சாரணர் இயக்கத்தினர் ..... (நிரை நிரையாக / தாரை தாரையாக) அணிவகுத்து நின்றனர்.

(06) கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

கூவுகின்றன , பாடகர்கள் , மரம் , சிரிப்பான் , நீர் , சிற்பங்கள்

(1) அ.ஃறிணை, பன்மை, படர்க்கைப் பெயர்ச்சொல் :- .....

(2) உயர்திணை, ஒருமை, எதிர்கால வினைச்சொல் :- .....

(3) உயர்திணை, பன்மை, படர்க்கைப் பெயர்ச்சொல் :- .....

(07) கீழே தரப்பட்டுள்ள ஆண்பால் சொல்லுக்குப் பொருத்தமான பெண்பாற் சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

குருடன் :- .....

(08) பின்வரும் பந்தியில் இடம்பெற்றுள்ள மூன்று சொற்களில் எழுத்துக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன. அச்சொற்களை இனங்கண்டு புள்ளிக்கோட்டின் மீது திருத்தமாய் எழுதுக.

வாருங்கள் தோழர்களே! இந்த அட்புதமான தேனை எவ்வாறு உருவாக்குகின்றோம் என்று கூறுகின்றேன். முதலில் நாம் அறுகோணவடிவில் மெலுகிட்டு இடைவெளியில்லாமல் வரிசையான அறைகளைக் கொண்ட கூட்டை அமைப்போம். பின்னர், பறந்து சென்று மலர்களிலிருந்தும் கணிகளிலிருந்தும் தேனை எடுத்துக்கொண்டு கூட்டை அடைவோம்.

(1) ..... (2) ..... (3) .....

www.lkedu.lk

(09) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.

(1) இ. போ. ச :- ..... (2) ம. ப. பா :- .....


(10) பிராணிகளுக்கான ஆண், பெண் மரபுப் பெயர்களைக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.

	பிராணி	ஆண்	பெண்
(1)	ஆடு		
(2)	பூனை		

(11) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

இது என்ன? :- .....

(12) கீழே காணப்படும் வீட்டில் அம்புக்குறிகளினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள பகுதிகளின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.



(1) A :- ..... (3) C :- .....

(2) B :- ..... (4) D :- .....

(13) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.


(1) Hands up :- ..... (2) Please sit down :- .....

(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

ம(ட்)ட பாண் எ(ப்)பா. :- .....

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

உங்கள் பெயர் என்ன? :- .....

(16)  இவ்வுருவில் காணக்கிடைக்கும் செங்கோணத்திலும் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை யாது? .....

(17) 6 2 9 4 8 என ஐந்து கார்ட்போர்ட் அட்டைகளில் எண்கள் எழுதப்பட்டுள்ள முறை இங்கு காட்டப்பட்டுள்ளது. இந்த ஐந்து அட்டைகளையும் பயன்படுத்தி அமைத்துக்கொள்ளக்கூடிய மிகச்சிறிய எண்ணைச் சொற்களில் எழுதுக.

.....

(18) குறித்த ஒரு எண்ணை 7 இனால் வகுக்கும்போது விடை 6 ஆகும். அதன்படி, அவ்வெண்ணை 3 இனால் வகுத்தால் வரும் விடை யாது? .....


(19) மு.ப 10.50 இற்கு வீட்டிற்கு வந்த அண்ணா பி.ப 1.20 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்டார்.

(1) அவர் வீட்டிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக. .....


(2) அண்ணா வீட்டில் செலவிட்ட காலம் எவ்வளவு? .....

(20) அப்பா வீட்டிற்கு 36 முட்டைகளைக் கொண்டு வந்தார். முட்டைகளை வீட்டிற்குக் கொண்டுவரும்போது அவற்றில் $\frac{1}{4}$ பங்கு முட்டைகள் உடைந்திருந்தன. அதன்படி, அப்பா வீட்டிற்குக் கொண்டுவந்த முட்டைகளில் உடையாமல் இருந்த முட்டைகளின் எண்ணிக்கை யாது? .....

(21) ஒரு பிள்ளைக்கு சிவப்பு நிற பலூன்கள் 3, மஞ்சள் நிற பலூன்கள் 4 என்ற வீதம் 5 பிள்ளைகளுக்கு வழங்குவதற்குத் தேவையான மொத்த பலூன்களின் எண்ணிக்கை யாது? .....

(22) 

இவ்வட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி 60000 இற்கும் 90000 இற்கும் இடைப்பட்ட இரண்டு எண்களை எழுதுக. .....

(23)  (1) அருகே காட்டப்பட்டுள்ள மூன்று கார்ட்போர்ட் துண்டுகளையும் பயன்படுத்தி அமைத்துக்கொள்ளக்கூடிய திண்மம் யாது? .....


(2) அத்திண்மத்திலுள்ள முகங்களின் எண்ணிக்கை யாது? .....

(24)

5A	24
5B	32
5C	28

இவ்வட்டவணையினால் காட்டப்பட்டுள்ளது, 5A, 5B, 5C ஆகிய வகுப்புக்களில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கைகளாகும். அம்மூன்று வகுப்புக்களிலும் உள்ள மொத்தப் பிள்ளைகளும் 4 குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். அதன்படி, ஒரு குழுவிலிருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? .....

www.ikedu.lk


(25) 

சுட்டெண்:-.....

3 மணிக்கு 20 நிமிடங்கள் என்பதை இக்கடிகார முகத்தில் வரைந்து காட்டுக.
(மணித்தியால முள், நிமிட முள் என்பவற்றைத் தெளிவாக வரைக.)

(26) கீழே தரப்பட்டுள்ள உரோம எண்குறிகளை இந்து அராபிய எண்குறிகளில் எழுதுக.

(1) XIV :- ..... (2) XVI :- .....

(27) 

இக்கனவுருவின்,

(1) திட்டத்தின் நீளம், அகலத்தை எழுதுக. நீளம் :- ..... அகலம் :- .....

(2) பக்கத்தோற்றத்தின் நீளம், அகலத்தை எழுதுக. நீளம் :- ..... அகலம் :- .....

(28) (1) ஒரு தாங்கியில் $15l\,400ml$ மண்ணெண்ணெய் இருந்தது. அதிலிருந்து $3l\,800ml$ மண்ணெண்ணெய் விற்கப்பட்டது. அதன்படி, எஞ்சிய மண்ணெண்ணெயின் அளவு யாது? .....

(2) அரிசி மூட்டையொன்றின் நிறை 18kg 600g ஆகும். பருப்பு மூட்டையொன்றின் நிறை 14kg 800g ஆகும். அதன்படி, இரண்டு மூட்டைகளினதும் மொத்த நிறை யாது? .....

(29) (1) 26 வாரங்களில் உள்ள நாட்களின் எண்ணிக்கை யாது? .....

(2) $\frac{1}{2}$ நாளிற்கு உள்ள மணித்தியாலங்களின் எண்ணிக்கை யாது? .....

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) "நீரிழிவு" நோயை ஏற்படுத்தக்கூடிய காரணம் அல்லாதது,


(1) இனிப்பான உணவுகளை அதிகளவில் உட்கொள்ளல். (2) உடலுக்குத் தேவையான உடற்பயிற்சி இல்லாமை. (3) எந்நேரமும் நீர் அருந்துதல்.

(31) "கண்டமாலை" நோயினால் பாதிப்படைவதைத் தவிர்த்துக்கொள்ள உண்ண வேண்டியது,

(1) கடல் மீன்கள் (2) கீரை வகைகள் (3) கிழங்கு வகைகள்

(32) ஆபத்தின்போது தனது வாலை முறித்துவிடும் பிராணி,

(1)  (2)  (3) 

(33) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது இலங்கையின் தேசியக் கொடியாகும். இதில் பச்சை மற்றும் செம்மஞ்சள் நிறங்கள் குறித்துக்காட்டப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் முறையே,

(1) D மற்றும் B (2) A மற்றும் D (3) B மற்றும் C

(34) "பருந்து" தனக்குத் தேவையான இரையைப் பற்றிக்கொள்வது,

(1) கால்களின் மூலம் (2) அலகின் மூலம் (3) நாக்கின் மூலம்

(35) இரவு நேரத்தில் ஒலி எழுப்பி உணவு தேடும் பிராணி,

(1) செண்பகம் (2) ஆந்தை (3) வெளவால்

(36) இரையைப் பிடிப்பதற்காகத் தனது வாழிடத்தை அமைத்துக்கொள்ளும் பிராணி,

(1) தேனீ (2) சிலந்தி (3) எறும்பு

(37) மரவள்ளித் தாவரம் உணவைக் களஞ்சியப்படுத்தி வைப்பது,

(1) வேர்களிலாகும் (2) தண்டிலாகும் (3) ஆணிவேர்த் தொகுதியிலாகும்

(38) வாய் மூலம் கொடுக்கப்படும் தடுப்பூசி,

(1) ஈர்ப்புவலி நோய்த் தடுப்பூசி (2) நீர்வெறுப்பு நோய்த் தடுப்பூசி (3) போலியோ தடுப்பூசி

(39) இலங்கையில் முதன்முதலில் அமைக்கப்பட்ட குளம்,

(1) திஸா வாவி (2) பசவக்குளம் (3) கலா வாவி

(40) மூடியிட்டு மூடாமல் சமைக்க வேண்டிய உணவுப் பொருள்,

(1) மரவள்ளி (2) ஈரப்பலா (3) வற்றாளை

(41) மரங்களைச் செதுக்குவதற்குப் பயன்படுத்தத்தக்க மிக உகந்த உபகரணம்,

(1) சீவுளி (2) துறப்பணம் (3) உளி

(42) சம எண்ணிக்கையிலான பாதங்களைக் கொண்ட இரு பிராணிகள்,

(1) பூரான், வெட்டுக்கிளி (2) சிலந்தி, உண்ணி (3) இறால், தேள்

www.ilkedu.lk

(43) சிவப்பு நிறத்திலான உடலைக் கொண்ட இரு பிராணிகள்,

(1) செவ்வெறும்பு, மரவட்டை (2) அட்டை, நுளம்பு (3) தும்பி, உண்ணி

(44) உணவை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி அல்லாதது,

(1) அட்டை (2) சிலந்தி (3) எறும்பு

(45) ஊர்ந்து செல்லும் பிராணி அல்லாதது,


(1) தவளை (2) அட்டை (3) முதலை

(46) நீரிற்கு குளோரீன் இடுவது,

(1) நுளம்புகள் நீரில் முட்டையிடுவதைத் தவிர்ப்பதற்கு (2) நீரைத் தூய்மையாக்குவதற்கு

(3) நீரில் உப்புச் சுவையை அதிகரிக்கச் செய்வதற்கு

*** பிள்ளையொன்றினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையைக் கீழுள்ள உரு காட்டுகின்றது. அதன்படி, இலக்கம் (47), (48) ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்க.**




(47) இவ்வுருவில் A யினால் காட்டப்பட்டுள்ளது,

(1) பிளாஸ்டிக் தட்டு (2) இரும்புத் தகடு (3) தளவாடி


(48) பிள்ளைக்குச் சுவற்றின் மீது காணக்கிடைப்பது,

(1) வானவில்லின் நிறங்கள் (2) சூரியன் (3) சூரிய ஒளி

(49) காந்தக்கோல்கள் இரண்டு ஒன்றுக்கொன்று அருகேயுள்ள இரண்டு சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.



சந்தர்ப்பம் A



சந்தர்ப்பம் B

(1) சந்தர்ப்பம் A யில் காந்தக்கோல்கள் ஒன்றையொன்று தள்ளும். சந்தர்ப்பம் B யில் காந்தக்கோல்கள் ஒன்றையொன்று கவரும்.

(2) சந்தர்ப்பம் A யில் காந்தக்கோல்கள் ஒன்றையொன்று கவரும். சந்தர்ப்பம் B யில் காந்தக்கோல்கள் ஒன்றையொன்று தள்ளும்.

(3) இரண்டு சந்தர்ப்பங்களிலும் காந்தக்கோல்கள் ஒன்றையொன்று கவரும்.

(50) இரண்டு வர்ணங்களைக் கலப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியாத வர்ணம்,

(1) நீலம் (2) ஊதா (3) கபிலம்

(51) பனிக்கட்டிகளை நீண்ட நேரத்திற்கு உருகாது பேணிக்கொள்வதற்கு வைக்க வேண்டியது,

(1) இரும்புத் தகடுகளினால் செய்யப்பட்ட பெட்டியில் (2) ரெஜிபோம் பெட்டியில் (3) கண்ணாடிப் பெட்டியில்

(52) உடலை நோய்களிலிருந்து பாதுகாக்கும் உணவு வகைகள்,

(1) தானிய வகைகள், இறைச்சி வகைகள் (2) கிழங்கு வகைகள், பால் (3) பழ வகைகள், கீரை வகைகள்

(53) 

இவ்வாறான அமைப்பில் தாவர இலைகளைச் சேர்த்துத் தனது வாழிடத்தை அமைத்துக்கொள்வது,

(1) முசுறு (2) கறையான் (3) தேனீ

(54) மண்ணினுள் முட்டையிடும் பிராணி அல்லாதது,

(1) ஓணான் (2) தவளை (3) முதலை

(55) புல்லாங்குழலை இசைப்பதற்காக விரல்களை வைப்பதற்கு உள்ள துளைகளின் எண்ணிக்கை,

(1) 6 (2) 7 (3) 5

(56) உணவுக்குப் பயன்படும் வேர்கள்,

(1) கரும்பு, கொகில (2) பூசணி, கெக்கரி (3) வற்றாளை, மரவள்ளி

(57) சிவப்பு மற்றும் கறுப்பு நிறங்களைக் கொண்ட வித்து,

(1) குன்றிமணி (2) ஆமணக்கு (3) வேம்பு

(58) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள வித்து வகை,

(1) புலிநகம் (2) அச்சி (3) எண்ணை

(59) இலேசான தண்டுடைய தாவரம்,

(1) தேக்கு (2) பருத்தி (3) கருங்காலி

(60) "பாடசாலை விட்டு வீட்டிற்கு வரும் வழியில் கடும் மழையில் அகப்பட்டுக் கொண்ட நான்..." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) .....

(2) .....

(3) .....

www.ikedu.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

தரம் 6 ~ 11 வகுப்பு

ICT (Englidh Medium)
(தமிழ் Medium)

By :- S.முரளி

அழையுங்கள்

76667-4945
www.learneasy.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

தரம் 9 10 11 வகுப்பு

கணிதம்

A .வாகீஷன்

அழையுங்கள்

76667-4945
www.learneasy.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

தரம் 10 & 11 வகுப்பு

ICT (தமிழ் Medium)

By :- P.நர்மதா

அழையுங்கள்

76667-4945
www.learneasy.lk





LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

தரம் 10 & 11 வகுப்பு

வணிகக்கல்வி

By : S.ரகு

அழையுங்கள்

76667-4945
www.learneasy.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

(English Medium)

தரம் 6 7 10 11

zoom

விஞ்ஞானம்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மட்டுமே. அழையுங்கள்

M.JEROM 76667–4945

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-03

விடைப்பத்திரம்

வினாத்தாள் - I

(01) 3	(02) 1	(03) 2	(04) 3	(05) 2
(06) 3	(07) 1	(08) 2	(09) 3	(10) 1
(11) 3	(12) 1	(13) 3	(14) 2	(15) 1
(16) 2	(17) 1	(18) 3	(19) 2	(20) 3
(21) 1	(22) 3	(23) 2	(24) 3	(25) 1
(26) 2	(27) 1	(28) 3	(29) 2	(30) 1
(31) 3	(32) 2	(33) 3	(34) 2	(35) 1
(36) 3	(37) 1	(38) 2	(39) 3	(40) 1

வினாத்தாள் - II

(01) (1) காலைவேளை (2) கன்று (3) புல்+தரை (4) விரைந்து

(02) (1) நான் திங்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை. (2) நான் செவ்வாய் பாடசாலைக்குச் செல்லவில்லை.

(03) (1) கற்குகை (2) முட்செடி (04) எங்களுடைய வீட்டிற்கு அவர்கள் வந்தார்கள்.

(05) (1) குலை குலையாக (2) நிரை நிரையாக (06) (1) சிற்பங்கள் (2) சிரிப்பான் (3) பாடகர்கள்

(07) குருடி (08) (1) அற்புதமான (2) மெழுகிட்டு (3) கனிகளிலிருந்தும்

(09) (1) இலங்கை போக்குவரத்துச் சபை (2) மறு பக்கம் பார்க்க (10) (1) கடா, மறி (2) கடுவன், பெட்டை

(11) What is this? (12) (1) Roof (2) Window (3) Door (4) Wall

(13) (1) கைகளைத் தூக்கவும். (2) தயவுசெய்து அமருங்கள். (14) எனக்குப் பாண் வேண்டாம்.

(15) ஒ(B)ப(G)கே நம குமக்(Dh)த? (16) 3 (17) இருபத்து நான்காயிரத்து அறுநூற்று எண்பத்தொன்பது

(18) 14 (19) (1) 13:20 (2) 2 மணித்தியாலம் 30 நிமிடங்கள் (20) 27 (21) 35

(22) பொருத்தமான எண்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும். (23) (1) உருளை (2) 3 (24) 21

(25)  (26) (1) 14 (2) 16 (27) (1) 5cm, 3cm (2) 5cm, 2cm

(28) (1) 11*l* 600*ml* (2) 33kg 400g (29) (1) 182 (2) 12

(30) 3	(31) 1	(32) 3	(33) 2	(34) 1
(35) 3	(36) 2	(37) 1	(38) 3	(39) 2
(40) 1	(41) 3	(42) 2	(43) 1	(44) 3
(45) 1	(46) 2	(47) 3	(48) 1	(49) 2
(50) 1	(51) 2	(52) 3	(53) 1	(54) 2
(55) 1	(56) 3	(57) 1	(58) 3	(59) 2

(60) எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியான முறையில் அமையுமாறு வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I ($2\frac{1}{2}$ X 40 = 100 புள்ளிகள்)

வினாத்தாள் II (1) 4 புள்ளிகள் (2) 2 புள்ளிகள் (3) 2 புள்ளிகள் (4) 1 புள்ளி (5) 2 புள்ளிகள் (6) 3 புள்ளிகள்

(7) 1 புள்ளி (8) 3 புள்ளிகள் (9) 2 புள்ளிகள் (10) 2 புள்ளிகள் (11) 1 புள்ளி (12) 2 புள்ளிகள்

(13) 2 புள்ளிகள் (14) 1 புள்ளி (15) 1 புள்ளி (16) 2 புள்ளிகள் (17) 2 புள்ளிகள் (18) 2 புள்ளிகள்

(19) 3 புள்ளிகள் (20) 2 புள்ளிகள் (21) 2 புள்ளிகள் (22) 2 புள்ளிகள் (23) 3 புள்ளிகள் (24) 2 புள்ளிகள்

(25) 2 புள்ளிகள் (26) 2 புள்ளிகள் (27) 3 புள்ளிகள் (28) 3 புள்ளிகள் (29) 3 புள்ளிகள்

(30 – 59) 30 புள்ளிகள் (60) 6 புள்ளிகள், முழு விடைத்தாளையும் கவனத்திற்கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும் சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்.

www.ikedu.lk